**செய்தி வெளியீடு–778 30.10.2009**

## தென் ஆப்பிரிக்காவில் 5வது காமன்வெல்த் கராத்தே போட்டியில் தமிழகக் காவல் துறையின் 11 வீரர்கள் 12 பதக்கங்கள் பெற்று சாதனை!

## முதலமைச்சர் கலைஞர் பாராட்டு !

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகன்ஸ்பார்க் நகரில் 5வது காமன்வெல்த் காரத்தே போட்டி 15.10.2009 முதல் 18.10.2009 வரை நடைபெற்றது. இதில் 23 நாடுகளைச் சேர்ந்த 1700 காரத்தே வீரர்கள் பங்கு கொண்டனர். இந்தியா சார்பில் பங்கேற்ற 118 வீரர்களில் தமிழகக் காவல் துறையில் பணிபுரியும் 9 ஆண் காவலர்களும், 3 பெண் காவலர்களும் கலந்துகொண்டனர்.

இவர்களில் மத்திய குற்றப்பிரிவில் பணிபுரியும் தலைமைப் பயிற்சியாளராகிய தலைமைக் காவலர் திரு. நா. மோகன் தங்கப் பதக்கமும்,

சென்னை ஆயுதப்படைப் பிரிவில் பணிபுரியும் முதல்நிலைப் பெண் காவலர்கள் மு. சமியா சுல்தானா, கி. தனம், புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் பணிபுரியும் ஜோ.மேட்சராக்கினி ஆகிய மூவரும் மூன்று வெள்ளிப் பதக்கங்களும்,

அதிதீவிரப்படைப் பிரிவில் பணிபுரியும் தலைமைக் காவலர் திரு. ஆர். பரந்தாமன், முதல்நிலைக் காவலர்கள் திரு கே.செந்தில்குமார், திரு.ஜே. நாகராஜன், மத்திய குற்றப்பிரிவில் பணிபுரியும் தலைமைக் காவலர் திரு. ஆர். தமிழ்செல்வன், சிறப்பு இலக்குப் படைப் பிரிவில் பணிபுரியும் தலைமைக் காவலர் திரு. பெ. தர்மராஜ், சென்னை ஆயுதப்படைப் பிரிவில் பணிபுரியும் தலைமைக் காவலர் திரு. எம். தனசேகரன் ஆகிய 6 பேரும் தலா ஒன்று வீதம் 6 வெள்ளிப் பதக்கங்களும்,

சென்னை ஆயுதப்படைப் பிரிவில் பணிபுரியும் தலைமைக் காவலர் திரு. அ. மாரிமுத்து இரண்டு வெண்கலப் பதக்கங்களும்,

– ஆக மொத்தம் 12 பதக்கங்களை வென்றுள்ளனர்.

தென்னாப்பிரிக்க நாடு சென்று இந்தியா சார்பில் கலந்துகொண்டு 12 பதக்கங்களைத் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்துள்ள தமிழகத்தைச் சேர்ந்த 11 காவல்துறை வீரர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9.